**ஸ்ரீ ஜயவர்தனபுர கோட்டே மாநகர சபை**
**கொழும்பு மாவட்டம்**

---

## 1. நிதிக் கூற்றுக்கள்

### 1.1 நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பித்தல்

2016 ஆம் ஆண்டின நிதிக்கூற்றுக்கள் 2017 மார்ச் 28 ஆந் திகதியன்றும் முன்னைய ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2016 மார்ச் 30 ஆந் திகதியன்றும் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் 2016 ஆம் ஆண்டினது கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2017 ஒக்டோபர் 09 ஆந் திகதி மாநகர ஆணையாளருக்கு அனுப்பிவைக்கப்பட்டுமிருந்தது.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 1.3 ஆம் பந்தியில் தரப்பட்டுள்ள விடயங்களின் தாக்கத்தினைத் தவிர ஸ்ரீ ஜயவர்த்தனபுர கோட்டே மாநகர சபையின் 2016 டிசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயபூர்வமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.3 நிதிக் கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 1.3.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

கணக்காய்வின்போது பின்வரும் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன

(அ) பின்வரும் பெறுமதிகள் கணக்கில் சேர்த்துக்கொள்ளப்பட்டிருக்கவில்லை.
- (i) பெற வேண்டிய வட்டி வருவாயாகிய ரூபா 162,500
- (ii) பெற வேண்டிய கழிவுப் பொருள் கட்டணமாகிய ரூபா 2,299,510
- (iii) அரசாங்க அச்சகத்திற்கு செலுத்தப்பட வேண்டிய ரூபா 1,450,000

(ஆ) தீர்வை வரிக் கழிவாகிய ரூபா 10,922,317 திரண்ட நிதியத்தில் வரவு வைக்கப்பட்டதால் செலவினம் அதேயளவு குறைந்திருந்தது.

(இ) முன்னைய ஆண்டின் பொருட்டு பெறப்பட்ட வட்டியாகிய ரூபா 105,711 மீளாய்வாண்டினது வட்டியாகக் கணக்கிலிடப்பட்டமையால் வருவாய் அதேயளவு அதிகரித்திருந்நது.

(ஈ) விளம்பரப் பலகைக் கட்டணமாகிய ரூபா 225,000 கொடுப்பனவு மறுக்கப்படாத காசோலைகளாக கணக்கிலிடப்பட்டதால் திரண்ட நிதியமும் இலாபமும் அதேயளவு குறைந்தும் அதிகரித்தும் காட்டப்பட்டிருந்தன.

(உ) கணக்கீட்டு வழுவின் காரணமாக திரண்ட நிதியப் பற்றாக்குறை ரூபா 89,356,601 குறைத்துக் காட்டப்பட்டிருந்தது.

(ஊ) பெற வேண்டிய பெறுமதி சேர் வரி ரூபா 35,311,735 அதிகரித்துக் காட்டப்பட்டிருந்தது.

(எ) நகர அபிவிருத்தி நிதிய வைப்பு முதலீட்டுக் கணக்கு மீதி ரூபா 77,618 அதிகரித்துக் காட்டப்பட்டிருந்தது.

(ஏ) கடன் கொடுத்தோருக்கான நிதியேற்பாடு ரூபா 8,000,000 அதிகரித்ததன் காரணமாக கடன் கொடுத்தோர் கணக்கு அதேயளவு அதிகரித்துக் காட்டப்பட்டிருந்தது.

(ஐ) ஆண்டின் இறுதியிலேனும் ரூபா 1,418,173 பெறுமதியான ஒப்பந்தம் ஆரம்பிக்கப்பட்டிராததால், திரண்ட நிதியம் அதேயளவு குறைத்தும் கடன் கொடுத்தோர் கணக்கு அதேயளவு அதிகரித்தும் காட்டப்பட்டிருந்தன.

(ஒ) கணக்குகளில் வெளிப்படுத்தப்படாமை

---

வெளி நபர்களுக்கெதிரான 04 நீதிமன்ற வழக்குகளது ரூபா 7,233,710பெறுமதியும் வெளி நபர்களால் தாக்கல் செய்யப்பட்டிருந்த பணம் அறவிடும் நோக்கமல்லாத பிற நலன்களைப் பெறும் நோக்கத்திலான 21 வழக்குகளது இயல்பும் நிச்சயமற்ற தன்மையும் நிதிக் கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

**1.3.2 கணக்கிணக்கஞ் செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்குகள்**

---

நிதிக் கூற்றுக்களின் பிரகாரம் ஒரு கணக்கீட்டு விடயத்தின் மீதி ரூபா 16,005,426 ஆகவிருந்தது. உப பதிவேடுகளின் பிரகாரம் அம் மீதி ரூபா 16,170,927 ஆகவிருந்தது.

**1.3.3 கணக்காய்விற்கான சான்றின்மை**

---

(i) பெற வேண்டிய 03 விடயங்களது மீதியாகிய ரூபா 4,815,154 கூட்டுத் தொகை மற்றும் ஒரு கடன் கொடுத்தோர் தொகையான ரூபா 159,761,797 என்பன அநேக ஆண்டுகளாக தீர்த்து வைக்கப்படாது முன்கொண்டுவரப்பட்டவாறிருந்தன.

(ii) அறவிடப்பட வேண்டிய ஊழியர் கடன் மீதி ரூபா 112,816,867 ஆகும். வேலை இடமாற்றம் பெற்றுச் சென்ற ஊழியர்களின் ரூபா 1,867,175, ஓய்வுபெற்ற ஊழியர்களிடமிருந்து வருமதியாகிய ரூபா 722,588, பதவி துறந்த ஊழியர்களின் ரூபா 722,588, நெடுங்காலமாக தீர்த்து வைக்கப்படாதிருக்கும் இனங்காணாத கடனாகிய ரூபா 113,536 என்பன இவற்றுள் உள்ளடங்கியிருந்தன. முன்னைய ஆண்டின் இறுதியில் 104 ஊழியர்களிடமிருந்து அறவிட வேண்டியிருந்த ரூபா 1,318.895 தொகையில் எதுவுமே நடப்பாண்டின்போது அறவிடப்பட்டிருக்கவில்லை.

**1.3.4 கணக்காய்விற்கான சான்றின்மை**

---

**(அ) பதில் வழங்கப்படாத கணக்காய்வு ஐய வினாக்கள்**

---

22017 ஆகஸ்ட் 30 ஆந் திகதியளவில் 10 கணக்காய்வு ஐய வினாக்களுக்கு பதில் வழங்கப்படாதிருந்தன. அக் கணக்காய்வு ஐய வினாக்களுடன் தொடர்புடைய கொடுக்கல் வாங்கல்களது பெறுமதி ரூபா 170,617,243 ஆகும்.

**(ஆ) கணக்காய்விற்கு தகவல்களை வழங்காமை**

---

கணக்காய்விற்கு தேவையான தகவல்களை வழங்காமையால் ரூபா 51,789.910 தொகையுடைய கொடுக்கல் வாங்கல்களைக் கணக்காய்வில் திருப்திகரமாக சான்றுறுதிப்படுத்த முடியவில்லை.

**02. நிதிசார் மீளாய்வு**

**2.1 நிதிப் பெறுபேறுகள்**

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக் கூற்றுக்களின் பிரகாரம், 2016 டிசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டிற்கான மாநகரசபையின் மீண்டுவரும் செலவினத்திலும் கூடிய வருவாய் ரூபா 663,783,644 ஆகும். இதனோடொத்த முன்னைய ஆண்டின் மீண்டுவரும் செலவினத்திலும் கூடிய வருவாய் ரூபா 391,162,435 ஆகும்.

**2.2 நிதிக் கட்டுப்பாடு**

கொடுப்பனவு மறுக்கப்பட்ட ரூபா 447,139 பெறுமதியான 36 காசோலைகள் தொடர்பாக 186(4)(அ) நிதிப்பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை மேற்கொள்ளப்படவில்லை.

**2.3 வருவாய் நிர்வாகம்**

**2.3.1 மதிப்பிடப்பட்ட வருவாய், உள்ளபடியான வருவாய், வருவாய் நிலுவை என்பன**

சபையால் மீளாய்வாண்டினதும் முன்னைய ஆண்டினதும் பொருட்டுச் சமர்பிக்கப்பட்ட மதிப்பிடப்பட்ட வருவாய், உள்ளவாறான வருவாய், வருவாய் நிலுவை தொடர்பான தகவல்கள் பின்வருமாறு

| | 2016 | | | | 2015 | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| வருவாய்க்கான விடயம் | 2016 சனவரி நிலுவை மீதி | பட்டியல் தொகை | உள்ளவாறான அறவீடு | 2016 டிசெம்பர் 31 இல் உள்ளவாறான திரண்ட நிலுவை | 2015 சனவரி நிலுவை மீதி | பட்டியல் தொகை | உள்ளவாறான அறவீடு | 2015 டிசெம்பர் 31 இல் உள்ளவாறான திரண்ட நிலுவை |
| | ரூபா 000 | ரூபா 000 | ரூபா 000 | ரூபா 000 | ரூபா 000 | ரூபா 000 | ரூபா 000 | ரூபா 000 |
| தீர்வையும் வரியும் | 98,855 | 219,757 | 144,531 | 95,134 | 84,944 | 207,579 | 193,668 | 98,855 |
| அனுமதிப்பத்திரக் கட்டணம் | - | 4,432 | 4,432 | - | - | 5,690 | 5,690 | - |
| வாடகை | 4,128 | 22,905 | 17,996 | 5,093 | 6,291 | 21,793 | 24,003 | 4,081 |
| வியாபார வரி | - | 5,017 | 5,017 | - | - | 5,339 | 5,339 | - |

**2.3.2 வீதமும் வரியும்**

2016 ஆம் ஆண்டின்போது 02 தடவைகளில் ரூபா 1,957,404 தொகையான வீதமும் வரியும் பதிவழிக்கப்பட்டிருந்தன. பதிவழிக்கப்பட்ட ரூபா 450,637 தொடர்பாக உள்ளூராட்சி ஆணையாளரது அங்கீகாரம் பெறப்படவில்லை.

**2.3.3 வர்த்தக அனுமதிப்பத்திரங்கள்**

வர்த்தக அனுமதிப்பத்திரங்கள் வருவாயாக 204 வர்த்தக நிறுவனங்களிலிருந்தும் 15 கடைகளிலிருந்தும் 2016 டிசெம்பர் 31 இல் உள்ளவாறு அறவிடப்பட வேண்டியிருந்த தொகை ரூபா 873,570 ஆகும்.

**2.3.4 வியாபார வரி**

2016 டிசெம்பர் 31 இல் உள்ளவாறு 10 வருவாய்ப் பிரதேசங்களின் 695 வர்த்தக நிறுவனங்களிலிருந்தும் 70 வர்த்தகக் கூடங்களிலிருந்தும் வர்த்தக வரி வருவாயாக அறவிடப்பட வேண்டியிருந்த தொகை ரூபா 1,988.250 ஆகும். அதேவேளையில் ஒப்பந்தங்களுடன் சம்பந்தப்பட்ட 08 நிறுவனங்களிலிருந்து வர்த்தக வரியாக செலுத்தப்பட வேண்டியிருந்த தொகை செலுத்தப்படாததால் மாநகரசபை ரூபா 24.000 வருவாய் இழப்பிற்குள்ளாகியிருந்தது.

**2.3.5 ஏனைய வருவாய்**

**(அ) சுற்றாடல் அனுமதிப்பத்திரங்கள்**

அனுமதிப்பத்திரங்கள் காலாவதியாகியிருந்தும், 33 நிறுவனங்கள் தமது அனுமதிப்பத்திரங்களைப் புதுப்பித்திருக்கவில்லை. அதேவேளையில், அனுமதிப்பத்திரங்களைப் பெற வேண்டிய 14 வர்த்தக நிறுவனங்கள் அவற்றைப் பெற்றிருக்கவில்லை. இதன் காரணமாக, மாநகரசபை இழப்பீட்டிற்குள்ளான தொகை முறையே ரூபா 132,000 மற்றும் ரூபா 56,000 என்பனவாகும்.

**(ஆ) வெலிக்கடை பிளாஸா வர்த்தகக் கூட்டுத் தொகுதியில் உள்ள கடைகளை குத்தகைக்கு வழங்குதல்**

2016 டிசெம்பர் 31 இல் உள்ளவாறு 30 கடைகளிலிருந்து அறவிடப்பட வேண்டியிருந்த வாடகை ரூபா 700,185 ஆகும். இவற்றுள் மூன்று மாதங்களுக்கு மேலாகத் தொடர்ச்சியாக தமது வாடகையைச் செலுத்தாதிருந்த கடைக்காரர்களது தொகை ரூபா 282,106 ஆகும்.

**(இ) அறிவித்தல் பலகைக் கட்டணம்**

மீளாய்வாண்டின் போது சபை இனங்காணாது போன 26 அறிவித்தல் பலகைகள், 5 பதாதைகள், 1 LED பலகை என்பவற்றால் சபை இழப்பீட்டிற்குள்ளான வருவாய் ரூபா 569,125 ஆகும்.

**2.3.6 தண்டப் பணம்**

2016 டிசெம்பர் 31 இல் உள்ளவாறு மாநகர சபைகள் கட்டளைச் சட்டத்தினது 252 ஆம் அத்தியாயத்தின் 261(1) ஆம் பிரிவின் பிரகாரம் 14 தண்டப்பணச் சான்றிதழ்களில் குறிப்பிடப்பட்ட ரூபா 25,550,166 அறவிடப்பட வேண்டியிருந்தது.

## 03. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 செயற்பாட்டு வினைத்திறமையின்மை

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்படுகின்றன.

(அ) 2015 ஆம் ஆண்டு தொடக்கம் 3229 பிரதிகளைக் கொண்ட ''அசிரிமத் கோட்டே'' எனும் ரூபா 2,825,375 கிரயமுடைய பிரசுரம் களஞ்சியத்தில் பாவனையற்றிருந்தது. பாடசாலைகளிலும் பல்கலைக்கழகங்களிலும் வாசகர்களுக்கிடையேயும் கோட்டே இராசதானியின் வரலாற்று முக்கியத்துவத்தை பறைசாற்றுவதும் கோட்டே இராசதானியின் வரலாற்றுப் பெருமையை ஞாபகமூட்டுவதுமே இதன் நோக்கமாகும் எனத் தெரிவிக்கப்பட்டிருந்தது. எவ்வாறாயினும், மேற்படி புத்தகப்பிரதியின் நோக்கம் ஈடேறவில்லை.

(ஆ) மூன்றாம் நிலை தேர்ச்சிபெறாத தொழிலாளி ஒருவர் கடற்படையினரால் 2016 ஏப்ரல் 05 ஆம் திகதி கைதுசெய்யப்பட்டிருந்தபோதும், அவரது 2016 ஏப்ரல் மாத மொத்த சம்பளமாகிய ரூபா 31,074 அவரது பிரத்தியேக வங்கிக்கணக்கிலிடப்பட்டிருந்தது. மேல் மாகாண அரச சேவை விதிக்கோவையின் 31 ஆம் பிரிவின் பிரகாரம் கடற்படை வெளியேற்றிய ஊழியர் ஒருவரை மேல் மாகாண அரச சேவையில் நியமிக்கலாகாது. எனினும், அவர் ஆற்றிய சேவைக்காக அங்கீகாரமின்றி அவருக்கு 2016 மே 24 தொடக்கம் 2016 யூன் 23 ஆந் திகதி வரையிலான சம்பளமாக ரூபா 31,174 வழங்கப்பட்டிருந்தது.

(இ) வெலிக்கடை பொலிஸ் நிலையத்திற்கருகே மாநகரசபைக்கென முன்மொழியப்பட்ட கட்டிடத்தை நிர்மாணிப்பதற்காக 2015, 2016 ஆம் ஆண்டுகளில் ரூபா 23,158,753 கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. ஆயினும், இதற்கான பற்றுச்சீட்டில் குறிப்பிடப்பட்டிருந்த தொகை ரூபா 16,924,563 ஆகும். எவ்வாறாயினும், 2015 மே 07 ஆந் திகதியன்று முன்மொழியப்பட்ட இடத்தில் அல்லாது தற்போதைய இடத்திலேயே கட்டிடத்தை நிர்மாணிக்க வேண்டுமெனப் பொதுச் சபை தீர்மானித்திருந்தது. ஆகவே, மேற்கூறியவாறு செலவிடப்பட்ட ரூபா 23,158,753 பயனற்ற செலவினமாகியது.

### 3.2 சர்ச்சைக்குரிய கொடுக்கல் வாங்கல்கள்

(அ) ராஜகிரிய கார்டன்ஸில் 615/3ஆம் இலக்க உத்தியோகபூர்வ மனையில் குடியிருந்து 2015 பெப்ரவரி 25 ஆந் திகதி இடமாற்றத்திற்குள்ளான உத்தியோகத்தர் ஒருவர் அம்மனையை விட்டு நீங்காதிருந்தார்.

(ஆ) மாநகர சபை சாரதி ஒருவர் 2016 ஆகஸ்ட் முதல் டிசெம்பர் வரை மேல் மாகாண முதலைமைச்சரின் பிரத்தியேக பதவியணியில் இணைத்துக் கொள்ளப்பட்டிருந்தார். இதன் பொருட்டு மாநகர சபை நிதியிலிருந்து அவருக்கு குறித்த காலப்பகுதியின்போது சம்பளமும் மேலதிக நேர வேலைக் கொடுப்பனவுமாக ரூபா 205,507 வழங்கப்பட்டிருந்தது.

### 3.3 சிக்கனமற்ற கொடுக்கல் வாங்கல்கள்

ராஜகிரிய 'ஜனஜய' நகர புதிய வர்த்தகக் கூட்டுத்தொகுதிக்கென மாநகர சபை வளவில் கார் தரிப்பிடம் ஒன்றை நிர்மாணிப்பதற்கு முன்மொழியப்பட்டிருந்தது. எவ்வாறாயினும், இவ் வேலை நிறைவேற்றப்படாமையால் கேள்விகளைக் கோருவதற்குச் செலவாகிய ரூபா 74,370 பயனற்ற செலவினமாகியது.

## 3.4 பயன்படுத்தப்படாத / குறைவாகப் பயன்படுத்தப்பட்ட சொத்துக்கள்

(அ) பயன்படுத்த முடியாததும் ரூபா 17,673,035 பெறுமதியானதுமான 07 வாகனங்கள் 06 மாதங்கள் முதல் 03 ஆண்டுகள் வரை பழுதுபார்க்கப்படாதிருந்தன.

(ஆ) மூன்று ரூபா 8,692,020 பெறுமதியுடைய வாகனங்களைக் கைதவிர்ப்புச் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படவில்லை.

(இ) 2014,2015 ஆம் ஆண்டுகளில் கொள்வனவு செய்யப்பட்ட ரூபா 101,025 பெறுமதியான பூசுவதற்கான மை பயன்படுத்தப்படாதிருந்தது.

## 3.5 ஒப்பந்த நிர்வாகம்

(அ) 2016 பெப்ரவரி 15 ஆந் திகதியன்று ரூபா 619,276,616 ஒப்பந்தக் கிரயத்துடன் தனது நிர்மாண வேலையை ஆரம்பித்த ஜனஜய நகர கலவன் அபிவிருத்தி செயற்திட்டம் 18 மாதங்களில் முடிவடைய வேண்டியதாகவிருந்தும், 2017 செப்டம்பரிலும் முடிவடையாதிருந்தது. நிர்மாண வேலையின்போதும் அதன் பின்னரும் மொத்த ஒப்பந்தக் கட்டணத்தில் 32 சதவீதம் உசாத்துணைக் கட்டணமாகச் செலுத்தப்படவேண்டியபோதும், மீளாய்வாண்டின் இறுதியளவில் உடன்பாடுகளுக்குள்ளான தொகையிலும் 4 சதவீத அதிகரிப்புடன் உசாத்துணைக் கட்டணம் வழங்கப்பட்டிருந்தது.

### (ஆ) அங்கம்பிட்டிய வீடமைப்புத் தொகுதியை நிர்மாணித்தல்

அங்கம்பிட்டிய வீடமைப்புத் தொகுதியை நிர்மாணிப்பதற்கு பிரத்தியேக ஒப்பந்தக்காரர் ஒருவருக்கு மீளாய்வாண்டின் இறுதியில் உள்ளவாறு ரூபா 48,320,909 கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. நேரடிப் பரிசோதனையின்போது வீடமைப்புத் திட்டத்தில் உள்ள சுவர்களில் சில இடங்களில் வெடிப்புகள் தோன்றியிருந்தது புலனாகியது. ஒட்டுமொத்தமாகப் பார்க்குமிடத்து இந்த இரு மாடி வீடமைப்புத் தொகுதி நிர்மாண வேலை திருப்தியளிக்கும் தரத்துடன் அமையவில்லை. ஆகவே, இது எந்நேரத்திலும் சரிந்து விழலாம் எனும் அபிப்பிராயம் அங்கு வசிப்பவர்களிடையே உதயமாகியிருந்தது.

## 3.6 செயற்திட்டத் தாமதம்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன

(அ) 2016 டிசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 1,222,886,828 கொடுப்பனவு செய்யப்பட்டிருந்த ரூபா 1,687,986,224 ஒப்பந்தப் பெறுமதி வாய்ந்த ஜனஜய நகர செயற்திட்டத்தில் பின்வரும் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

(i) ஒப்பந்தம் வழங்கப்பட்டதன் பின்னர் ஒப்பந்தத்தின் மூலத் திட்டம் அவ்வப்போது மாற்றஞ் செய்யப்பட்டிருந்தது.

(ii) முதல் சந்தர்ப்பத்தில் ஏழாவது மாடியை அலுவலகமாகப் பயன்படுத்தலாம் எனத் தீர்மானிக்கப்பட்டிருந்தபோதும், பின்னர் தீர்மானம் மாற்றத்திற்குள்ளாகி அதில் கடைகளை அமைத்து முன் விற்பனை அடிப்படையில் வழங்குவதற்கு தீர்மானிக்கப்பட்டிருந்தது. ஆயினும், பொதுச் சபையின் தீர்மானம் காரணமாக கொடுப்பனவுகளில் ஏற்பட்ட தாக்கமும் உடன்படிக்கையில் கையெழுத்திட்டதன் பின்னர் மேற்கொள்ளப்பட்ட தீர்மானமும் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படவில்லை.

(iii) ஒப்பந்த உடன்படிக்கைப் பிரகாரம் 14.07 ஆம் நிபந்தனையில் குறித்தவாறு விலைப்பட்டியல் கொடுப்பனவு செய்யப்படாமைக்குத் தண்டப் பணமாக ரூபா 18,655,727 வழங்கப்பட வேண்டுமென 2017 மே 16 ஆந் திகதியன்று ஒப்பந்தகாரர் கோரிக்கை விடுத்திருந்தார்.

(iv) உடன்படிக்கையின் பிரகாரம் குறித்த கட்டிட நிர்மாண வேலை 2016 யூலை 23 ஆந் திகதி நிறைவேறியிருக்க வேண்டுமொயினும், பின்னர் 2017 சனவரி 20 வரை கால நீடிப்பு வழங்கப்பட்டிருந்தது. எனினும், 2017 யூன் 15 வரை கட்டிட வேலை முடிவடையாதிருந்தது.

(v) நிர்மாண வேலை முடிவடைந்த பின்னர் வழங்கப்பட்ட வேண்டிய 2 சதவீத நிறுத்தி வைத்த தொகையாகிய ரூபா 1,519,187 (Completion of Post Construction phase) கழித்துக் கொள்ளப்படாது மொத்தக் தொகையையும் மாநகர சபை ஒப்பந்தக் கம்பனிக்கு வழங்கியிருந்தது.

(ஆ) சபைக்கான வேலைத்தளம் ஒன்றையும் வாகனப் பராமரிப்புக் கூறு ஒன்றையும் களஞ்சியக் கட்டிடத் தொகுதி ஒன்றையும் நிர்மாணிக்கும் பணி 2014 ஆகஸ்ட் 21 ஆந் திகதியன்று ரூபா 46,973,078 பெறுமதியில் பிரத்தியேக ஒப்பந்தகாரரிடம் ஒப்படைக்கப்பட்டிருந்தது. நாணயக்கார மாவத்தையில் உள்ள அரசாங்கத்தின் உடைமையாகிய 02 ஏக்கர், 01 றூட் 34 பேர்ச்சஸ் சதுப்பு நிலத்தில் இது அமையவிருந்தது. மாநகர சபைக்கு இதில் எதுவித சட்டபூர்வ உரித்தும் இருக்கவில்லை. உடன்பாட்டிற்குள்ளான தொகையின் 20 சதவீதமாகிய ரூபா 9,394,616 மற்றும் பகுதியளவிலான முதல் கொடுப்பனவாக ரூபா 8,257,371 என்பன 2015 சனவரி 13 ஆந் திகதியன்று வழங்கப்பட்டிருந்தது. எனினும், 2015 பெப்ரவரி 02 ஆந் திகதியளவில் ரூபா 11,468,571 பெறுமதியிலான வேலையே முடிவடைந்திருந்ததால் ஒப்பந்தகாரருக்கு ரூபா 5,716,458 கூடுதலாக வழங்கப்பட்டிருந்தது. 2017 யூலை 12 ஆந் திகதிய நேரடிப் பரிசோதனையின்போது நிலத்துக்கு வெளியே தோற்றம் அளிக்காதிருந்த அத்திவாரத்தின் மீது 42 கொங்கிரீட் தூண்களுக்கு கம்பிகள் பதிக்கப்பட்டு அவை துருப்பிடித்துமிருந்தன. ஒப்பந்தகாரர் வேலையை நிறுத்தி வெளியேறி இருந்தமையால் சூழவர புதர்கள் மண்டியிருந்தன. ஆகவே, ஏற்கனவே இது தொடர்பாக வழங்கப்பட்டிருந்த ரூபா 17,651,987 பயனற்ற செலவினமாகியிருந்தது.

**3.7 திண்மக் கழிவுப் பொருள் முகாமைத்துவம்**

பின்வரும் விடயங்கள் அவதானிப்படுகின்றன.

(அ) 2008 யூலை 30 ஆந் திகதிய 1560/6 ஆம் இலக்க அதிவிசேச வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட மேற்கு மாகாண 2008 ஆம் ஆண்டின் 01 ஆம் இலக்க நகர கழிவுப் பொருள் முகாமைத்துவ விதிகளின் 06 ஆம் அத்தியாத்தில் உள்ள 59 ஆம் பந்தியின் பிரகாரம், சகல உள்ளூராட்சி சபைகளும் கார்பனிக் கழிவுப் பொருட்களைப் பயன்படுத்தி ஜீவ வாயு கொம்போஸ்ட் உற்பத்தியில் அல்லது ஏனைய செயல்முறை தொழில்நுட்பத்தில் ஈடுபடுவதற்கு பணியாற்ற வேண்டுமொயினும், மாநகர சபையின் அதிகாரத்துக்குட்பட்ட பிரதேசத்தில் கழிவுப் பொருள் முகாமைத்துவத்திற்கான மூலவளமாக அவை பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை.

(ஆ) நகர திண்மக் கழிவுப் பொருள் முகாமைத்துவ விதிகளது 02 ஆம் அத்தியாத்தினது 18(1) இன் பிரகாரம் வரி செலுத்தப்படுவதற்குப் புறம்பாக செலவுகளை ஈடு செய்வதற்காக கழிவுப் பொருட்கள் சேகரிக்கப்படுவதற்கான கட்டணத்தைக் குடியிருப்பாளர் செலுத்தவும் வேண்டும். எவ்வாறாயினும், மாநகர சபையின்

அதிகாரத்துக்குட்பட்ட பிரதேசத்தில் அவ்வாறான கட்டணத்தை மாநகர சபை அறவிட்டிருக்கவில்லை.

(இ) கழிவுப் பொருள் முகாமைத்துவ மாதாந்தச் செயல் முன்னேற்ற அறிக்கைகளும் கழிவுப் பொருட்களை அழிவுக்குள்ளாவன மற்றும் அழிவுக்குள்ளாகாதன என வெவ்வேறுபடுத்திப் பிரிப்பது தொடர்பான கால அட்டவணைகளும் தயாரிக்கப்படவில்லை.

(ஈ) மாநகர சபையின் 6,7,8,9,10 ஆம் பிரதேசங்களில் 02 ஆண்டுகளுக்கு அதாவது 2015 மே 31 தொடக்கம் 2017 ஏப்ரல் 30 வரை கழிவுப் பொருட்களை அகற்றுவதற்காக பிரத்தியேக கம்பனி ஒன்றிற்கு ரூபா 103,782,886 வழங்கப்பட்டிருந்தது. ஒப்பந்த உடன்படிக்கையின் பிரகாரம் நாளாந்தச் செயற்பாட்டு அறிக்கைகள் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

## 4. நல்லாளுகையும் கணக்களிப்பொறுப்பும்

### 4.1 பாதீட்டுக் கட்டுபாடு

பாதீடு செய்யப்பட்ட மற்றும் உள்ளவாறான வருவாய், செலவினம் என்பவற்றுக்கிடையே குறிப்பிடத்தக்க வேறுபாடுகள் நிலவியமையால் பாதீடானது ஆக்கபூர்வமான முகாமைத்துவக் கட்டுப்பாட்டுச் சாதனமாகப் பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை எனத் தென்பட்டது.

### 4.2 பொருட் கொள்வனவுத் திட்டம்

2016 ஆம் ஆண்டின் பொருட்டு முன்மொழியப்பட்டு சமர்ப்பிக்கப்பட்ட பொருட் கொள்வனவுத் திட்டம் நிதி, திட்டமிடல் அமைச்சின் 128 ஆம் இலக்க பாதீட்டுச் சுற்றறிக்கைக்கமைய இருக்கவில்லை.

### 4.3 உள்ளகக் கணக்காய்வு

போதியளவு உள்ளகக் கணக்காய்வு மேற்கொள்ளப்படவில்லை.

## 5. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

பின்வரும் முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுத் துறைகளில் விசேட கவனம் தேவைப்படுகின்றது.

(அ) கணக்கு
(ஆ) கையிருப்புக் கட்டுப்பாடு
(இ) வருவாய் நிர்வாகம்
(ஈ) ஒப்பந்த நிர்வாகம்
(உ) உள்ளகக் கணக்காய்வு